**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**<u>OS. NO: 5329/2023</u>**

**<u>Deposition of: DW1</u>** **<u>DATE: 23.01.2026</u>**

**NAME: M. Rajkumar**

**AGE: 56 Years**

**<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்</u>:**

**<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1, 2 பிரதிவாதிகளுக்கு எங்கள் நிறுவனத்தில் எந்த தேதியில் பணியில் சேர்ந்தார்கள் என்றால் 22.04.2021 அன்று 1ம் பிரதிவாதியும் 04.05.2021 அன்று 2ம் பிரதிவாதியும் எங்கள் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார்கள். 1 ,2 பிரதிவாதிகள் எங்கள் நிறுவனத்தில் சேர்வதற்கு முன்பு வேறு எந்தெந்த நிறுவனங்களில் பணிபுரிந்தார்கள் என்ற விவரம் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியும் அவர்கள் கடைசியாக எம்.எஸ்.என் கன்டைனர் லையன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்தார்கள். 1,2 பிரதிவாதிகள் எங்கள் நிறுவனத்தில் பணியில் சேர்வதற்கு முன்பே எனக்கு நன்றாக அறிமுகமானவர்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளை நான் பணிபுரியும் நிறுவனத்திற்கே வந்துவிடுங்கள் என்று நான் அழைத்ததன் பேரில் எங்கள் நிறுவனத்தில் அவர்கள் பணிக்கு சேர்ந்தார்கள் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் எனக்கு எங்கள் நிறுவனத்தில் சேர்வதற்கு முன்பே அவர்களது குணாதிசயங்கள் அவர்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஓரளவுக்கு தெரியும். 1,2 பிரதிவாதிகள் வேலை கேட்டு எங்கள் நிறுவனத்தில் கொடுத்த விண்ணப்பம் மேலாளர் என்ற முறையில் என் பரிசீலனைக்கு வரவில்லை. அவர்களது விண்ணப்பங்கள் Human Resource Manager பரிசீலனைக்கு வந்தது. 1,2 பிரதிவாதிகள் எங்கள் நிறுவனத்தில் எனக்கு கீழே பணிபுரிந்தார்கள். நான் எங்கள் நிறுவனத்தில்

பொது மேலாளர் என்ற முறையில் 1,2 பிரதிவாதிகளுக்கு வேலையை பிரித்து கொடுப்பேன் என்றால் தினந்தோறும் வேலை பிரித்து கொடுப்பதில்லை அவர்கள் எந்த பிரிவில் பணி அமர்த்தப்பட்டார்களோ அந்த பணியை செய்வார்கள். ஒவ்வொரு மாதமும் எனக்கு கீழே பணிபுரியும் நபர்கள் செய்த பணி விவரம் என் பார்வைக்கு வரும் என்றால் சரிதான். ஒவ்வொரு மாதமும் என் கீழ் பணிபுரியும் நபர்களின் Performance எனக்கு தெரியும். 1,2 பிரதிவாதிகள் எங்கள் நிறுவனத்தில் பணியில் சேர்ந்த பிறகு பதவி உயர்வு எதுவும் கொடுக்கவில்லை. பொதுவாக எங்கள் நிறுவனத்தில் பணி உயர்வும் சம்பள உயர்வும் ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் அல்லது வருடத்திற்கு ஒரு முறையும் வழங்கப்படுமா என்றால் பணி உயர்வுக்கு கால நிர்ணயம் இல்லை. ஊதிய உயர்வு வருடத்திற்கு ஒரு முறை வழங்கப்படும். 1,2 பிரதிவாதிகளுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டதா என்று எனக்கு ஞாபகம் இல்லை. 1,2 பிரதிவாதிகள் மீது கிரிமினல் வழக்குகள் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகள் கடைசியாக எங்கள் நிறுவனத்தில் எந்த தேதி வரை பணிபுரிந்தார்கள் என்றால் 15.02.2023 அன்று ராஜினாமா கடிதம் கொடுத்தார்கள். 1,2 பிரதிவாதிகள் ராஜினாமா கடிதம் கொடுப்பதற்கு முன்பு எங்கள் நிறுவனத்தில் அவர்கள் இருவரும் முறைகேடு செய்தார்கள் என்று அறிவிப்போ இடைக்கால பணிநீக்கமோ செய்தீர்களா என்றால் அந்த விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. 1,2 பிரதிவாதிகள் மற்றும் இதர பணியாளர்கள் ஏதேனும் முறைகேடுகள் செய்திருந்தால் அவர்கள் மீது நான் நடவடிக்கை எடுத்து இருப்பேன் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் ராஜினாமா கடிதம் கொடுக்கும் வரை எங்கள் நிறுவனத்தில் எந்த முறைகேடும் செய்யவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண

வாக்குமூலத்தில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1,2 பிரதிவாதிகள் நடவடிக்கைகள் சரியில்லை என்று சொல்லியுள்ளேன். அது சம்பந்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கடிதம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் ஒவ்வொரு வருடமும் வருமான வரி கணக்கு சம்ர்பிப்போம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மூன்று ஆண்டுகளுக்கும் வழக்கு தாக்கல் செய்த பிறகு முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யும் வரை எங்கள் நிறுவனத்தில் சமர்பிக்கப்பட்ட வருமான வரி கணக்குகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்ததாக சொல்லும் வருமான வரி கணக்கில் லாப நஷ்ட கணக்குகள் இருக்கும் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி நடவடிக்கையால் எங்கள் நிறுவனத்திற்கு இழப்பு ஏதும் ஏற்பட்டதாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 6 (b) the defendants diverted the work of shanghai vaste international freight company limited to the 3rd defendant இது சம்பந்தமாக அந்த ஷாங்காய் நிறுவனம் எங்கள் நிறுவனத்திற்கு 1,2 பிரதிவாதிகள் Workorder (b/l) 3 ம்பிரதிவாதிக்கு டைவர்ட் செய்ததாக எழுத்துப்பூர்வமாக புகார் அனுப்பினார்களா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. புகார் எங்கள் நிறுவனத்திற்கு வந்திருந்தால் அந்த புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல.

3 ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.